ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2397/31 - 2024 අගෝස්තු මස 14 වැනි බදාදා - 2024.08.14

*2397/31 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

**அம்பாறை நகர சபை மற்றும் நாமல்ஓய பிரதேச சபையின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தினை அங்கீகரித்தல்**

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபையினது பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர், அம்பாறை நகர சபை மற்றும் நாமல்ஓய பிரதேச சபையின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),  
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*  
*12 ஆவது மாடி,*  
*"செத்சிறிபாய" கட்டம் II,*  
*பத்தரமுல்லை,*  
*2024, ஓகத்து 07.*

EOG 08-0181/1



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அம்பாறை நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசம் மற்றும் நாமல்ஓய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதியின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி தொடர்பான அறிவித்தல்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட), 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(A) ஆம் பிரிவிற்கு அமைய ஒழுங்கு செய்யப்பட்ட, அம்பாறை நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசம் மற்றும் நாமல்ஓய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதியின் அபிவிருத்தித் திட்டம் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், குறித்த 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய, அனுமதி வழங்கினேன் என்பதை, குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 8(G) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க** *(பா. உ.),*
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*12 ஆவது மாடி,*
*"செத்சிறிபாய" கட்டம் II,*
*பத்தரமுல்லை,*
*2024, ஓகத்து 09.*

EOG 08-0181/2

---

## அம்பாறை நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசம் மற்றும் நாமல்ஓய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதியின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(A) ஆம் பிரிவின் அதிகாரங்களுக்கு அமைய அம்பாறை நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசம் மற்றும் நாமல்ஓய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதியின் அபிவிருத்தித் திட்டத்தினை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணதுங்க அவர்களினால் குறித்த சட்டத்தின் 8(F) ஆம் பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க, 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**நிமேஷ் ஹேரத்,**
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2024, ஓகத்து 09.*

EOG 08-0181/3

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*